Embassy of Japan

No. 20, Gregory's Road, Colombo 7, Sri Lanka
TEL: 94-11-269-3831~3, FAX: 94-11-269-8629
E-mail: cultujpn@co.mofa.go.jp /www.lk.emb-japan.go.jp

**PRESS RELEASE**

ஊடக வெளியீடு ஜனவரி 23, 2012

**கிளிநொச்சி மாவட்டத்தின் மீள்கட்டுமானத்திற்கு ஜப்பான் மேலதிக உதவிகளை வழங்குகிறது.**

கிளிநொச்சி மாவட்டத்தில் கண்டாவளை பிரதேச செயலக பிரிவில் யுத்த சூழ்நிலைகளால் பாதிகக்ப்பட்டு அண்மையில் மீள்குடியமர்ந்துள்ள மக்களின் வாழும் சூழல் மற்றும் வாழ்வாதாரங்களை மேம்படுத்த மீள்க்கட்டுமான திட்டமொன்றை முன்னெடுப்பதற்கு ஜப்பானிய அரசாங்கம் 223,075 US டொலர்களை (அண்ணளவாக 25 மில்லியன் ரூபாவை) நன்கொடையாக வழங்கவுள்ளது.

“வட மாகாணத்திலுள்ள கிளிநொச்சி மாவட்டத்தில் மீள்குடியமர்ந்துள்ள மக்களின் சமூக, பொருளாதார மீள்கட்டமைப்புத் திட்டத்தின்” கீழ் பல்வேறு விவசாய மற்றும் மீன்பிடி உதவிகள் வழங்கப்படும். இச்செயற்திட்டமானது சேவா லங்கா நிறுவனத்தால் அமுல்படுத்தப்படுவதடன் 370 மேற்பட்ட குடும்பங்கள் பயனடையும். இச்செயற்திட்டத்தின் மூலம் அமைக்கப்படும் கீழக்கட்டுமாண வசதிகள் மீள்திரும்பிய மக்களின் சமூக பொருளாதார இடைவெளிகளை பூர்த்தி செய்ய மிகவும் முக்கியமானதாகும் “நாம் இச்செயற்திட்டத்திற்கு நிதி உவுதவிகளை வழங்குவதையிட்டு ஜப்பானிய அரசாங்கத்திற்கு நன்றி கூறுகிறோம்,” என்று சேவா லங்கா நிறுவனத்தின் தலைவர் Dr. ஹர்ச நவரத்ன அவர்கள் கூறினார்.

இச்செயற்திட்டத்திற்கான நிதியானது அடிமட்ட மனித பாதுகாப்புக்கான நன்கொடைத்திட்டத்தின் கீழ் வழங்கப்படுகிறது. 1989ம் ஆண்டிலிருந்து இது போன்ற 226 செயற்திட்டங்கள் US$ 29.5 மில்லியன (அண்ணளவாக 3400 மில்லியன ரூபா) செலவில் அடிமட்ட மனித பாதுகாப்புக்கான நன்கொடைத்திட்டத்தின் கீழ் செயறபடுத்தப்பட்டிருக்கின்றன.

இந்நன்கொடை தொடர்பான ஒப்பந்தம் இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் நொபுஹிதொ ஹொபொ மற்றும் சேவா லங்கா நிறுவனத்தின் தலைவர் Dr. ஹர்ச நவரத்ன ஆகியோருக்கிடையே கொழும்பிலுள்ள ஜப்பானிய தூதுவர் இல்லத்தில் ஜனவரி 23, 2012 அன்று கைச்சாத்திடப்பட்டது.

Please contact the Economic Cooperation Section of the Embassy for further information, Tel: 011-269-3831 (Ext.225)